| Article Date | Headline / Summary | Publication |
|---|---|---|
| 10 Jul 2026 | வாகனக் காப்பீடு எடுக்கப்போகிறீர்களா... இ ந்த விஷயங்கள் முக்கியம்! | Vikatan |

## வாகனக் காப்பீடு எடுக்கப்போகிறீர்களா... இந்த விஷயங்கள் முக்கியம்!



கார் அல்லது இருசக்கர வாகனம் எதுவாக இருந்தாலும், தற்போது கிடைக்கும் புதிய நீண்டகால காப்பீட்டு விருப்பங்களை ஆராய்ந்து, உங்கள் தேவைக்கு ஏற்ற திட்டத்தைத் தேர்வு செய்வது புத்திசாலித்தனமான முடிவாக இருக்கும்.

ராகேஷ் கௌல், தலைமை விநியோக அதிகாரி – சில்லறை வணிகப் பிரிவு, பஜாஜ் ஜெனரல் இன்ஷூரன்ஸ் லிமிடெட்.

இந்தியாவில் வாகனம் வைத்திருக்கும் ஒவ்வொருவருக்கும் வாகனக் காப்பீடு மிகவும் முக்கியம். 1988-ம் ஆண்டு மோட்டார் வாகனச் சட்டத்தின்படி, மூன்றாம் நபர் காப்பீடு (Third Party Insurance) கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இந்தக் காப்பீடு இல்லாமல் யாரும் சாலையில் வாகனத்தை ஓட்டக்கூடாது. இந்தக் காப்பீடு, ஒருவரின் வாகனத்தால் மற்றவர்களுக்கு ஏற்படும் உடல் காயம் அல்லது சொத்து சேதத்துக்கு நிதி பாதுகாப்பை (Financial Protection) வழங்குகிறது.